| |
|---|
| **வலயக்கல்வி அலுவலகம் - மட்டக்களப்பு மத்தி** |
| **கொரோனா விடுமுறைக்கால விசேட செயற்றிட்டம் 2020** |
| தரம் 11 **தமிழ் மொழி** முயற்சி 01 |
| பாடசாலை : மட் /மம /தாமரைக்கேணி ஸாஹிர் மௌலானா வித்தியாலயம், ஒருமணித்தியாலம் |

## பகுதி 1

01. தரப்பட்டுள்ள வினாகக்ளுக்கான விடைகளுள ̇ சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. போரக்களம் முழுதும் கறங்கு போல் திரிந்து – கறங்கு என்பதன ̇ ஒத்த கருத்துச் சொல்
   I. தூசி 2.. காற்று 3. பஞ்சு 4. துரும்பு
2. “தப்பிய கந்தை பீதாம்பரம் போல் - இதில் பீதாம்பரம் என்பதன் ஒத்த கருத்து
   1. கந்தலாடை 2. பட்டாடை 3. பருத்தியாடை 4. புடவை
3. மோதிரம், கடல் , சக்கரம், வண்டி என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
   I. அலை 2. அளகு 3. ஆளி 4.ஆழி
4. ஒருவரைப் பகிரங்கமாக அவமானப்படுத்தல் எனும் பொருள் தரும் மரபுத் தொடர்
   1.. கரி பூசுதல் 2. கழுத்தறுத்தல் 3.சனீல உரிதல் 4. சந்திக்கிழுத்தல்
5. வாழையின் இளம்பிஞ்சு கச்சல ̇ என்பது போல, பலாவின் இளம் பிஞ்சு
   I. வடு 2. குரும்பை 3. மூசு 4. நுங்கு
6. நீண்ட காலம் வாழ்பவன்
   1. சஞ்சீவி 2.அமரன் 3. சிரஞ்சீவி 4.அசகாயன்
7. ஐஅயபந என்பதன ̇ தமிழ் வடிவம்
   1. பெறுமதி 2.. விண்ணப்பம் 3. நீர்மம் 4. படிமம்
8. கார் மேகம் அன்ன கூந்தல் . - இங்கு கையாளப்பட்டுள்ள அணி
   I. உவமை 2. உருவகம் 3.தற்குறிப்பேற்றம் 4.உயர்வுநவிற்சி
9. அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடாதே – என்ற பழமொழி மூலம் வலியுறுத்தப்படுவது
   I. நன்றியுணர்வு 2. துரோகத்தனம் 3. நிதானம் 4. நேர்மை
10. ககரம் (ப) என்ற ஆங்கில எழுத்துகக் நிகராக ஒலிக்கும் சொல்
   I. கப்பல் 2. தேகம் 3.தங்கம் 4. சுகம

## பகுதி 11

**2.சுருக்கமான விடை தருக.**

I. பின்வரும் தொடரை சந்தி பிரித்து எழுதுக.

“ முழங்குதிரைப் புலனருவி கழங்கென முத்தாடும் ”

II. பின்வரும் வாக்கியத்தை மயக்கம் நீக்கி எழுதுக.

“கூட்டத்திற்கு பதில் பல்கலைக்கழக வேந்தர் தலைமை தாங்கினார்”

III. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக

''கணங்களின் பேராற்றில் மின்னி மறைகின்றன பல்லாயிரம் எண்ணக்குவியல்கள்'' ஐஏ.

'' வெட்டியெறிந்த நகம் போல விளங்கும் மூன்றாம் பிறை''-இதில் இடம்பெற்றுள்ள அணியை விளக்குக.

V. ''கரிகாற் சோழன் கடாரம் வென்றான்'' இவ்வாக்கியத்தை செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

VI. ''அணி'' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாக தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

VII. பின்வரும் வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தற்குறிகளை இட்டு அதனை மீண்டும் எழுதுக.

குரங்குக் குட்டி உனக்கு இதெல்லாம் எப்படியடா தெரியும் ஏஐஐஐ.

குமார ் பாடசாலைக்குச் சென்றான்.

கவின் மைதானத்திற்குச் சென்றான் - இவ்விரு வாக்கியத்தையும் ஒரே வாக்கியமாக மாற்றி எழுதுக.

IX. நாளை பாடசாலை நடைபெற மாட்டாது என்று அதிபர் அறிவித்தார் - இவ்வாகியத்தின் தலைமைத் தொடர் , சார்புத் தொடர் யாவை?

X. நேர்முக வர்ணனையாளரிடம் இருக்கக் கூடிய பண்புகள் இரண்டு தருக.

## பகுதி 111

### 03. சுருக்கமான விடை தருக.

1.''ஓடு மீன் ஓட உறு மீன் வரும் வரைக்கும் வாடியிருக்குமாம் கொக்கு...''
அ. இப்பாடலைப் பாடியவர் யார்? ஆ. உறுமீன் என்பதன் பொருள் யாது?

2. ''மேழி பெருகவேனும் தம்பிரானே! மேதினியோர் வாழ வேண்டும்....''
அ. மேழி என்பதால் குறிக்கப்படுவது யாது? ஆ. தம்பிரான் எனப்படுபவர் யார்?

3. ''உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினுஞ் செயிருடன் வந்த இச்சேயிழை தன்னினும்''
அ. உயிருடன் சென்ற ஒரு மகள் யார்? ஆ. செயிருடன் வந்த சேயிழை யார்?

4. ''இந்தக் கம்பியூட்டரும் அபப்டித்தான் அட்ச இருதயக் கலையில் கைதேர்ந்ததாக இருந்தது''
அ. அட்ச இருதயக் கலை என்றால் என்ன?
ஆ. ''கை தேர்தல் என்பதன் பொருள் யாது?

5. ''ஆடிக்குடத் தடையும் ஆடும் போதே இரையும்......''
அ. இதில் ஒப்பிடப்படுபவை யாவை? ஆ. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணி யாது?